அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை–600 006.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு – மே 2022

பகுதி–II உயிரி – விலங்கியல் விடைக்குறிப்பு

மொத்தமதிப்பெண்– 35

குறிப்பு :

1. நீலம் அல்லது கருப்புமையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.
2. படங்கள் வரைவதற்கு பென்சில் பயன் படுத்த வேண்டும்.
கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடையவிடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்துஎழுதவும்.

பிரிவு– 1

குறிப்பு :

1. அனத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2. ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிபெண் 8 X 1 =8

| Q. No | விடைக்குறிப்பு | | | |
|---|---|---|---|---|
| | TYPE- A | | TYPE- B | |
| 1 | ஈ | படியெடுத்தல் | அ | இருவாழ்விகள் |
| 2 | இ | டிரைகோடெர்மா பாலிஸ்போரம் | ஆ | உயிரின மறைவு |
| 3 | அ | டிவோனியன் | அ | விந்தக மேல் சுருள்குழல் |
| 4 | ஆ | உயிரினமறைவு | ஈ | O |
| 5 | அ | இருவாழ்விகள் | ஈ | படியெடுத்தல் |
| 6 | ஈ | O | இ | டிரைகோடெர்மா பாலிஸ்போரம் |
| 7 | ஆ | இயல்புதிரிபு, இணைப்பு இழைபதப்படுத்துதல், உற்பத்தி | அ | டிவோனியன் |
| 8 | அ | விந்தக மேல் சுருள் குழல் | ஆ | இயல்புதிரிபு, இணைப்பு இழைபதப்படுத்துதல், உற்பத்தி |

பிரிவு– 2

எவையேனும் நான்குவினாக்களுக்குவிடையளி 4 X 2 = 8

| Q.No | விடைக்குறிப்பு | மதிப்பெண் | |
|---|---|---|---|
| 9 | **<u>கன்னி இனப்பெருக்கம்:-</u>** அண்டசெல்லானது கருவுறாமலேயே முழு உயிரியாக வளர்ச்சி அடையும் செயல். | 1 ½ | 2 |
| | **எ.கா:- (ஏதேனும் ஒன்று)** தேனீக்கள்,மொழுக்கு ஈ, வளை தசைபுழுக்கள்,கடல்அர்ச்சின், கல்லீரல் புழுவின் ஸ்போரோசிஸ்ட்டுகள் மற்றும் ரீடியா லார்வாக்கள் | ½ | |

<table>
<tr><td>10</td><td><u>வாடகைத் தாய்மை:-</u><br>தாய்மை அடைய முடியாத பெண்ணிற்கு அல்லது பெண்களுக்கு வேறொரு பெண் ஒப்பந்த முறையில் கருவைச் சுமந்து குழந்தையைப் பெற்றுத்தரும் முறை.</td><td></td><td>2</td></tr>
<tr><td>11</td><td><u>குறியீட்டு இழை மற்றும் வார்ப்புரு இழை – வேறுபாடு</u><br>(ஏதேனும் இரண்டு)<br><table>
<tr><th>வ. எண்</th><th>வார்ப்புரு இழை</th><th>குறியீட்டு இழை</th></tr>
<tr><td>1.</td><td>தொடரும் இழை</td><td>நிறுத்தும் இழை</td></tr>
<tr><td>2.</td><td>3'→5' துருவத்துவம் பெற்ற டி.ன்.ஏ இழை.</td><td>5'→3' துருவத்துவம் பெற்ற டி.ன்.ஏ இழை.</td></tr>
<tr><td>3.</td><td>படியெடுத்தல் தொடர்ச்சியாக நடைபெறும்</td><td>படியெடுத்தல் தொடர்ச்சியாக நடைபெறாது</td></tr>
</table></td><td>2 x 1</td><td>2</td></tr>
<tr><td>12</td><td><u>லாமார்க்கின் பெற்ற பண்புகள் கடத்தப்படுதல் கோட்பாட்டினைத் தவறென்று நிரூபித்தவர்:-</u><br>(அ) ஆகஸ்ட்வீஸ்மான்<br><br>(ஆ<br>(i) தொடர்ந்து இருபது தலைமுறைகளாக சுண்டெலிகளின் வாலினைத் துண்டித்து பின்னர் இனப்பெருக்கத்தில் ஈடுபடுத்தினார். முடிவில் அனைத்து சுண்டெலிகளும் முழுமையான வாலுடனே பிறந்தன.<br>(அல்லது)<br>(ii) உடல்செல்களில் ஏற்படும் மாற்றம் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாது</td><td>1<br><br>1</td><td>2</td></tr>
<tr><td>13</td><td><u>யானைக்கால் நோயின் அறிகுறிகள்: (ஏதேனும் 2)</u><br>(i) நிணநீர் முடிச்சுகளில் வீக்கம்.<br>(ii) நிணநீர் நாளங்களில் ஏற்படும் அடைப்பு<br>(iii) கால்கள், விதைப்பை மற்றும் பால்சுரப்பிகளில் வீக்கம்</td><td>2 X 1</td><td>2</td></tr>
<tr><td>14</td><td><u>மரபணு சிகிச்சை:-</u><br>ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ திடீர்மாற்றமடைந்த அல்லீல்களைக் கொண்ட ஒருவருடைய செல்களுககுள் இயல்பான மரபணுவை செலுத்தி அவற்றைச் சரிசெய்யும் முறையாகும்.<br><br>(அல்லது)<br>மரபுக் குறைபாடுகளை மரபணு சிகிச்சை மூலம் சரி செய்யலாம்</td><td></td><td>2</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு– 3<br>ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். 3X 3 = 9<br>வினா எண் 19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும். | | |
| 15 | **<u>கருக்கொலை மற்றும் சிசுக்கொலை – வேறுபாடு:</u>**<br>**(i).கருக்கொலை:-**தாயின் கருப்பையிலேயே பெண்சிசுவைக் கருக்கலைப்பு செய்வது.<br>**(ii). சிசுக்கொலை :-**பிறந்தபின் பச்சிளம் பெண் குழந்தைகளை கொல்வது பெண்சிசுக் கொலை. | 1½<br>1½ | 3 |
| 16 | **Mere Attempt** | | 3 |
| 17 | **உயிர் எதிர்ப்பொருள் எதிர்ப்புத்திறன்:-**<br>(i) உயிர்எதிர்ப் பொருட்களின் தவறான பயன்பாடு<br>(ii) உயிர்எதிர்ப் பொருட்களின் அளவுக்கு அதிகமான பயன்பாடு<br>(iii) மோசமான தொற்றுத் தடுப்பு கட்டுப்பாடு மூலமும் நிகழ்கிறது. | 1<br>1<br>1 | 3 |
| 18. | **இறப்பு வீதம் மற்றும் பிறப்பு வீதம் – வேறுபாடு:-**<br>**1.இறப்பு வீதம்**<br>இறப்பு வீதம் என்பது பிறப்பு வீதத்துக்கு எதிரான இனக்கூட்டத் தொகை குறைப்புக் காரணி.<br>(அல்லது)<br>**இறப்பு விகிதம் (d) = $\frac{\text{குறிப்பிட்ட காலத்திய இறப்பு எண்ணிக்கை}}{\text{சராசரி இனக்கூட்டம்}}$**<br>**2.பிறப்பு வீதம்**<br>பிறப்பு வீத அதிகரிப்பால் இனக்கூட்ட அளவு அதிகரிக்கிறது<br>(அல்லது)<br>**பிறப்பு விகிதம் (b) = $\frac{\text{குறிப்பிட்ட காலத்திய பிறப்பு எண்ணிக்கை}}{\text{சராசரி இனக்கூட்டம்}}$** | 1½<br>1½ | 3 |
| 19 | **<u>XY-குரோமோசோம் வகை பால்நிர்ணயம்:-</u>**<br>I. பாலூட்டிகளின் பெண் உயிரிகளில் ஒரு X குரோமோசோம் மட்டுமே செயல்படுகின்றன. இன்னொரு X குரோமோசோம் செயல்படாமல் இருப்பதால் அளவீடுகளின் வேறுபாட்டை ஈடுசெய்து கொள்கின்றன.<br>II. ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின உயிரிகளிலும் ஒரு செல்லுக்கு ஒரு 'X' குரோமோசோம் மட்டுமே செயல்திறன் பெற்றுள்ளது. | 1<br>1 | 3 |

| | | | |
|---|---|---|---|
| | III. செயலற்ற குரோமோசோமே பார் உடல்களாக உள்ளன என மேரி லியோன் முன்மொழ்ந்தார்<br>**(அல்லது)**<br>லையான் கருதுகோள் | **1** | |
| | **பிரிவு– 4**<br>**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்** **2 x 5 =10** | | |
| **20** (அ) | **<u>மனித அண்டசெல்லின் அமைப்பு :-</u>**<br>**(1). விளக்கம்:-** **(ஏதேனும் 3)**<br>I. மனித அண்ட செல்லானது நுண்ணிய, ஓடற்ற, கருவுணவு அற்ற தன்மையுடைய செல்.<br>II. சைட்டோபிளாசம் ‘ஊபிளாசம்’ எனப்படும்.<br>III. இதனுள் காணப்படும் பெரிய உட்கருவிற்கு ‘வளர்ச்சிப்பை’ என்று பெயர்.<br>IV. அண்ட செல்லானது மூன்று உறைகளைக் கொண்டது,<br>a. உட்புறம் – மெல்லிய ஒளி ஊடுருவும் விட்டலின் சவ்வு<br>b. நடுப்பகுதி – தடித்த சோனா பெலூசிடா<br>c. வெளிப்புறம் – நுண்பை செல்களால் சூழப்பட்டட் கரோனா ரேடியேட்டா<br>V. விட்டலின் சவ்வுகும் சோனா பெலூசிடாவுக்கும் இடையில் ஒரு குறுகிய விட்டலின் புற இடைவெளி காணப்படுகிறது.<br>**(2). படம் மற்றும் பாகங்கள்**<br><br> | **3 x1**<br><br>**2** | **5** |
| | **(அல்லது)** | | |
| (ஆ) | **<u>மரபணு திட்டத்தின் சிறப்பியல்புகள்:-</u>** **(ஏதேனும் 5 குறிப்புகள்)**<br>I. மனித மரபணு 3 பில்லியன் நியூக்ளியோடைடு கார மூலங்கலைக் கொண்டுள்ளது.<br>II. மரபணு சராசரியாக 3000 கார மூலங்களைக் கொண்டுள்ளது.<br>III. மரபணுக்கள் 24 குரோமோசோம்களில் பரவியுள்ளது.<br>IV. 19 வது குரோமோசோம் அதிக மரபணு அடர்வினைக் | **5** *X* *1* | **5** |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டுள்ளது. 13 மற்றும் Y குரோமோசோம் ஆகியவை மிகக் குறைந்த மரபணு அடர்வினைக் கொண்டுள்ளன.<br>V. மனித குரோமோசோம் அமைப்பில் மரபணுக்கள் பல்வகைத் தன்மையைக் காட்டுகிறது.<br>VI. மரபணு தொகுதியில் 40000 – 35000 மரபணுக்கள் இருந்தாலும், ஏறக்குறைய 99.9 நியூக்ளியோடைடு கார மூலங்கள் அனைத்து மக்களிடமும் ஒரே மாதிரியாக உள்ளது.<br>VII. கண்டுபிடிக்கப்பட்ட மரபணுக்களில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மரபணுக்களின் பணிகள் தெறியவில்லை.<br>VIII. 2 விழுக்காட்டிற்கும் குறைவான மரபணுக்கள் மட்டுமே புரதங்களை குறியீடு செய்கின்றன.<br>IX. 1 வது குரோமோசோம் 2968 மரபணுக்களை கொண்டுள்ளது. அதேபோல் Y குரோமோசோம் 231 மரபணுக்களை கொண்டுள்ளது.<br>X. மனிதனில் பல்வேறுபட்ட ஒற்றை காரமூல டி.என்.ஏ க்கள் காணப்படக்கூடிய 1.4 மில்லியன் இடங்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். | | |
| **21 (அ)** | **<u>இம்யூனோகுளோபுலின் அமைப்பு:-</u>** **(ஏதேனும் 6 குறிப்புகள்)**<br>I. இம்யுனோகுளோபினின் Y-வடிவ அமைப்புடன் நான்கு பாலிபெப்டைடு சங்கிலிகளை கொண்டதாகும்.<br>II. இலகுவான சங்கிலிகள் ஏறத்தாழ 25,000 டால்டன் மூலக்கூறு எடையையும் (ஏறத்தாழ -214 அமினோ அமிலம்)<br>III. கனமான சங்கிலிகள் ஏறத்தாழ 50,000 டால்டன்மூலக்கூறு எடையையும் ( ஏறத்தாழ 450 அமினோ அமிலம்) கொண்டுள்ளன.<br>IV. பாலிபெப்டைடு சங்கிலிகள் டை-சல்பைடு (-S-S) பிணைப்பால் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.<br>V. ஒவ்வொரு லேசான சங்கிலியும் ஒரு கனமான சங்கிலியுடன் இணைக்கப்பட்டுள்ளது<br>VI. ஒவ்வொரு சங்கிலியும் (L மற்றும் H) இரண்டு முனைகளைக் கொண்டுள்ளது. ஒன்று C-முனையாகும் ( கார்பாக்ஸைல்) மற்றொன்று N-முனைஅல்லது அமினோ முனையாகும்.<br>VII. ஓர் இம்யுனோகுளோபுலினில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவற்றில் மாறுபடும் பகுதி (V) ஒரு முனையிலும் பெரிய நிலையான பகுதி (C) இன்னொரு முனையிலும் அமைந்துள்ளன. | **6x½ = 3** | **5** |

| | | | |
|---|---|---|---|
| | **(2). படம் மற்றும் பாகங்கள்**<br> | **2** | |
| | **(அல்லது)** | | |
| (ஆ) | **<u>கதிரியக்கக் கழிவு மேலாண்மை:-</u>**<br>**(i). விளக்கம்**<br>கதிரியக்கக் கழிவு மேலாண்மை கதிரியக்கக் கழிவு மேலாண்மையில் சுத்திகரித்தல், சேமித்தல் மற்றும் அணுக்கரு தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் திரவக்கழிவுகள், காற்றில் பரவும் கழிவுகள் மற்றும் திடகழிவுகள் ஆகியவற்றை சுத்திகரித்து, சேமித்து, பின் வெளியேற்றுதல் ஆகியவை அடங்கும்.<br>**(ii). கதிரியக்கக் கழிவுகளைஅகற்றும் முறைகள் (ஏதேனும் 2 )**<br>(1). **வரையறுக்கப்பட்ட உற்பத்தி**:- உற்பத்தியை கட்டுப்படுத்துதல்<br>(2). **நீர்த்துப் பரவுதல்**:- குறைந்தளவு கதிரியக்க கழிவுகளை நீர்த்தல் மற்றும் பரவுதல்<br>(3). **தாமதம் மற்றும் சிதைவு**:- குறைந்த வாழ்நாள் கொண்ட கதிரியக்க கழிவுகளை கையாளுதல்<br>(4). **செறிவூட்டல் மற்றும் உள்ளடக்கி வைத்தல்**:- அதிக வாழ்நாள் கொண்ட கதிரியக்க கழிவுகளைசுத்திகரிக்க பயன்படும் முறை<br>**(iii). கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை (ஏதேனும் 2 )**<br>(1). **பயன்படுத்தப்பட்ட எரிபொருள் கழிவுத் தொட்டி**:-<br>வினைக்கலன்களிலிருந்து வெளியேற்றி தற்காலிகமாக வினை தொட்டியில் சேகரித்தல்<br>(2). **உலர் கற்களாக மாற்றும் முறை:-** கழிவுகளை உலர்ந்த காரை (சிமெண்ட்) பெட்டகங்கள் மூடிவைத்தல்<br>(3). **பூமியுள் சேமிப்புக் கிடங்கு:-**ஆழமாக தோண்டி அணுக்கழிவுகளை சேமித்தல் | **1**<br><br>**2 x1**<br><br>**2 x1** | **5** |